வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 08 14.03.2026 சனிக்கிழமை இதழ் : 67 பக்கங்கள் : 08

## 84 ஈரானிய மாலுமிகளின் உடல்கள் தாய்நாட்டுக்கு!

கொழும்பு, மார்ச் 14

காலி கடற்பரப்பில் தாக்குதலுக்குள்ளான ஈரானிய கப்பலில் உயிரிழந்த 84 ஈரானியர்களின் உடல்களும் சிறப்பு விமானம் மூலம் நேற்று ஈரானுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதற்கிடையில் உயிருடன் மீட்கப்பட்ட 32 பேரில் 10 பேர் இன்னும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காலி வைத்தியசாலையின் குளிரூட்டப்பட்ட அறைகளில் வைக்கப்பட்டிருந்த இந்த உடல்கள் தாய் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ)

## மின்சார தொழிற்சங்கங்களின் பேச்சுவார்த்தையில் உடன்பாடு!

**ஜனாதிபதியுடன் நேற்று கூட்டம்**


கொழும்பு, மார்ச் 14

மின்சார தொழிற்சங்கத்தினர் நேற்று நண்பகல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்து தமது பிரச்னைகள் குறித்து கலந்துரையாடியதுடன், அந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

தமது பிரச்னைகளுக்கு ஜனாதிபதி நியாயமான 07

# ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் பேச்சுக்களை ஆரம்பித்தது அரசு!

**வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் அந்நாட்டு தூதுவருடன் முக்கிய சந்திப்பு**



கொழும்பு, மார்ச் 14

மத்திய கிழக்கில் நடந்து வரும் மோதல்கள் காரணமாக உலகளாவிய எரிசக்தி விநியோகச் சங்கிலிகளில் ஏற்படும் இடையூறுகள் குறித்த கவலைகளுக்கு மத்தியில் எரிபொருள் விநியோகத்தைப் பெறுவதற்காக இலங்கை ரஷ்யாவுடன் பேச்சுக்களை நடத்த ஆரம்பித்துள்ளது.

இதற்கு அமைவாக, ரஷ்ய எண்ணெய் வாங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்க வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் நேற்று இலங்கைக்கான ரஷ்ய தூதர் லெவன் எஸ். ஜகார்யனுடன் வெளிவிவகார அமைச்சில் அவசர சந்திப்பை நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது, இலங்கையின் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தைப் பராமரிப்பதற்கான மேலதிக நடவடிக்கையாக ரஷ்ய எரிபொருளைப் பெறு வது குறித்து அமைச்சர் விவாதித்தார்.

இதன்போது, இலங்கையின் கோரிக்கையை உடனடி யாக ரஷ்ய அரசாங்கத்திற்குத் தெரிவிக்க தூதுவர் லெவன் எஸ். ஜகார்யன் ஒப்புக்கொண்டார்.

மேலும், இதற்கான தேவையான ஏற்பாடுகளை 07

## தடையற்ற எரிபொருள் விநியோகம் இலங்கைக்கு உதவுகின்றது இந்தியா

கொழும்பு, மார்ச் 14

இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய, இந்தியாவிடம் விடுக்கப்பட்ட உதவி கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றங்கள் காரணமாக இலங்கையின் எரிசக்தி பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களைக் கருத்திற் கொண்டு, இந்தியாவிடம் இலங்கை விசேட கோரிக்கை ஒன்றை முன் வைத்திருந்தது.

கடந்த மார்ச் 6ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடன் நடத்திய சந்திப்பின் போதே இந்தக் கோரிக்கையை 07

## "வீட்டில் இருந்து வேலை" தற்போது அவசியமில்லை

**அரசாங்கம் தெரிவிப்பு**

கொழும்பு, மார்ச் 14

மத்திய கிழக்கு மோதல்களால் உலகளாவிய நெருக்கடி ஏற்பட்டாலும், தற்போது நாட்டில் வீட்டிலிருந்து வேலை செய்வது அவசியமில்லை என்று வர்த்தக, வணிப உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் முன்னேற்றங்களை உன்னிப்பாகக் 07

## ரஞ்சித் மத்தும பண்டார யாழ்.வந்தார்!

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

இதன்போது நல்லூர் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

தொடர்ந்து யாழ்.நகரில் உள்ள தனியார் விடுதியில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் புத்திஜீவிகளை இணைத்து ஏற்பாடு செய்யப்பட்ட அமரர் டி.எஸ்.சேனநாயக்க அரசியல் பீட செயலமர்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன, ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் அனோஜன் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## நாட்டில் 1/4 பங்கு மக்கள் வறுமையினால் பாதிப்பு!

**அமைச்சர் உபாலி பன்னிலகே**

கொழும்பு, மார்ச் 14

இலங்கை மொத்த சனத்தொகையில் நான்கில் ஒரு பங்கு மக்கள் வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் சுமார் 80 வீத மானோர் கிராமப்புறங்களில் வசிப்பதாக அமைச்சர் உபாலி பன்னிலகே 07

## மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்கள் பவானந்தராஜா எம்.பி. மீது குற்றச்சாட்டு!

யாழ்ப்பாணம், மார்ச் 14

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா மீது வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு முன் வைத்துள்ளனர்.


சண்டிலிப்பாய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவர் சிறீ பவானந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கூட்டத்தில் கலந்துகொண்ட மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கு குறித்த கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதியில்லை எனத் தெரிவித்து, அவர்களை வெளியேற்றுவதற்கு பவானந்தராஜா எம்.பி முயற்சித்தார் என தெரிவிக்கப்படுகிறது.

சுற்றறிக்கையின் அடிப்படையில் தாம் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ள 07

## யாழ்.கோட்டை, குருநகர் மீன்பிடித்துறை உலக வங்கியின் உதவியுடன் அபிவிருத்தி!

**வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு**



யாழ்ப்பாணம், மார்ச் 14

எமது மக்களின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தவும் வேலைவாய்ப்புகளை உறுதிப்படுத்தவும், உலக வங்கியின் முதற்கட்ட அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணக் கோட்டை மற்றும் குருநகர் மீன்பிடி துறைமுகம் ஆகிய செயற்றிட்டங்கள் மிகப் பெரிய பங்களிப்பை வழங்கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். 07

## உலக நாடுகளை போன்று இலங்கையில் கொள்கை ரீதியான அரசியல் அவசியம்!

**ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து**

கொழும்பு, மார்ச் 14

இலங்கையின் தற்போதைய அரசியல் கலாசாரம் மாற்றமடைந்து, சர்வதேச நாடுகளைப் போல கொள்கை ரீதியான அரசியல் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் உரையாற்றிய ரஞ்சித் மத்தும பண்டார, இலங்கை ஒரு பன்முகத்தன்மை கொண்ட நாடு என்பதைச் சுட்டிக்காட்டினார்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என அனைத்து 07

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய பெருங்கடல் நாடுகளிடையே வலுவான பொருளாதார ஒத்துழைப்பு!

## வலியுறுத்துகிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, மார்ச் 14

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு இடையே வலுவான அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும், பிராந்திய ஒருங்கிணைப்பு இல்லாதது புவிசார் அரசியல் பதற்றங்கள் அதிகரித்து வரும் நேரத்தில் இப்பகுதியை பாதிக்கப்படக்கூடியதாக மாற்றியுள்ளது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

தற்போதைய உலகளாவிய நிலைமை குறித்து ஒரு காணொளி அறிக்கையை வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே நடந்து வரும் மோதலை சுட்டிக்காட்டிப் பேசினார்.

பிராந்திய நீரில் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஈரானிய போர்க்கப்பலை மூழ்கடித்த சம்பவத்தையும் ரணில் விக்கிரமசிங்க மேற்கோள் காட்டினார்.

இதுபோன்ற சூழ்நிலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பதில் நாம் ஒரு உதவியற்ற சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை நிரூபிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், இந்தியப் பெருங்கடலின் வரலாற்று முக்கியத்துவத்தைப் பற்றி பிரதிபலித்த அவர், "பல்வேறு சமூகங்களுக்கிடையேயான தொடர்புகளிலும் நாகரிகங்களிலும் இந்தியப் பெருங்கடல் மிகப் பழமையானது" என்று விவரித்தார்.



வர்த்தகம், கலாசாரம் மற்றும் அரசியல் உறவுகளில் அதன் நீண்டகால பங்கையும் அவர் எடுத்துக்காட்டினார்.

பிராந்திய நாடுகளிடையே தொடர்ச்சியான கலந்துரையாடலின் அவசியத்தை வலியுறுத்திய முன்னாள் ஜனாதிபதி, ஏனைய கடல்சார் பிராந்தியங்களுடன் ஒப்பிடக்கூடிய ஒருங்கிணைப்பின் அளவை அடைவதற்கு நிலையான உரையாடலும் ஒத்துழைப்பும் அவசியம் என்று வலியுறுத்தினார். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது சுரேஷ் சாலே இலங்கையில் இல்லை!

## சட்டத்தரணி சஞ்ஜீவ சமரவிக்ரம விளக்கம்

கொழும்பு, மார்ச் 14

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற காலப்பகுதியில், முன்னாள் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் சுரேஷ் சாலே இலங்கையில் இருக்கவில்லை எனவும், அந்த நேரத்தில் அவர் புலனாய்வுத் துறையின் தலைவராகப் பணியாற்றவில்லை எனவும் சட்டத்தரணி சஞ்ஜீவ சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

சுரேஷ் சாலே 2016 ஆம் ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறியதுடன், மீண்டும் 2018 டிசெம்பர் மாதத்திலேயே நாட்டுக்குத் திரும்பினார்.

அத்தோடு 2019 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில், அவர் இந்தியாவில் உள்ள பாதுகாப்புப் படைகளின் பதவிநிலை கல்லூரியில் இராணுவப் பயிற்சியினைப் பெற்றுக்கொண்டிருந்தார்.

கோட்டாபய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரே சுரேஷ் சாலே மீண்டும் இலங்கை திரும்பினார். அதன் பின்னரே அவர் அரச புலனாய்வுச் சேவையின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று முடிந்த பின்னரே அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்- என்றார். (அ)

# சுண்டிக்குளம் மீனவர்கள் பிரச்னை குறித்து ஆராய்வு

கிளிநொச்சி, மார்ச் 14

கிளிநொச்சி -சுண்டிக்குளம் கடல் பேய்ப்பாறைப்பிட்டியில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக ஆராயும் நோக்குடன் நேற்று முன் தினம் காலை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குறித்த பகுதிக்கு சென்றிருந்தார்.

இதன்போது கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய அவர், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக கேட்டறிந்தார்.

1991ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த பகுதி மீனவர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் அந்த பகுதியை தனியொருவர் உரிமை கோரி வருவதாக கூறப்படும் நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அப்பகுதிக்கு சென்று நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார். (அ)

# இலங்கை அகதிகள் விரும்பினால் இந்திய குடியுரிமை வழங்கலாமா?

புதுடில்லி, மார்ச் 14

இந்தியாவில் வசிக்கும் இலங்கை தமிழ் அகதிகள் விரும்பும் பட்சத்தில் இந்தியக் குடியுரிமை வழங்கமுடியுமா? என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் இந்திய வம்சாவளி தமிழர்கள் என்ற பதத்துக்கு மேலதிகமாக இலங்கைத் தமிழர்கள் எனும் பதத்தையும் உள்வாங்குவதன் ஊடாக, இந்த விடயத்தினை ஆராய்வதாகவும் புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது அவர் தெரிவித்துள்ளார்.

"சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கையில் இருந்த குறித்த எண்ணிக்கையான இந்திய வம்சாவளி தமிழர்கள், மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பி குடியுரிமையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இருப்பினும் அந்த எண்ணிக்கை இதுவரை பூரணமடையாததன் காரணமாக அதில் இலங்கைத் தமிழர்கள் எனும் பதத்தையும் இணைக்கமுடியுமா? என்பது குறித்து ஆராய்கிறோம்.

இதனூடாக இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்கமுடியுமா? என்பது பற்றியும் ஆராய்ந்து வருகிறோம்" என திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி தெரிவித்துள்ளார். (அ)

# மின்சார கட்டண திருத்தம் தீர்மானம் மாத இறுதியில்!

கொழும்பு, மார்ச் 14

2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான மின் கட்டண திருத்தம் தொடர்பான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தீர்மானம் இந்தமாத இறுதியில் அறிவிக்கப்படவுள்ளது.

ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலப்பகுதிக்கு மின் கட்டணத்தை 13.56 சதவீதத்தால் அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் யோசனை ஒன்றை முன்வைத்தது.

இந்த மின் கட்டண திருத்தம் குறித்து பொது மக்களின் கருத்துக்களைக் கேட்டறிய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, பொது மக்கள் கருத்து கோரல் கட்டங் கட்டமாக முன்னெடுக்கப்படுகி

# மலையகத் தமிழர்கள் ஒரு தேசிய இனம் நாம் வெறும் தொழிலாளர் சமூகமல்லர்!

## தமிழ் முற்போக்கு கூட்டணியினர் ஜப்பானியத் தூதுவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 14



மலையகத் தமிழர்கள் இன்று வெறும் தொழிலாளர் சமூகமாகச் சுருங்கிவிடாமல், ஒரு தேசிய இனமாக வளர்ந்துள்ளனர் என இலங்கையிலுள்ள ஜப்பான் தூதுவர் இசொமடா அகியோவிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதிநிதிகள் குழு, கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் தூதுவர் இசொமடா அகியோ மற்றும் ஜப்பானிய உயர்மட்டக் குழுவினரை சந்தித்துக் கலந்துரையாடியது.

இச்சந்திப்பின்போது மனோ கணேசன் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு: -

"இலங்கையில் வாழும் சுமார் 15 இலட்சம் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் எதிர்கொள்ளும் சமூக - பொருளாதார சவால்கள் குறித்து ஜப்பான் இனிவரும் காலங்களில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்.

எமது மக்களை ஒரு இலங்கை தேசிய இனமாக அடையாளங்காணுங்கள். நாம் பல்வேறு துறைகளில் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றோம். தற்போதைய அரசு எமது பிரச்னைகள் குறித்து நிறையப் பேசினாலும், அவை இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

இலங்கைக்கு வரலாற்று ரீதியாக அதிகளவு உதவி வரும் நட்பு நாடான ஜப்பான், தனது உதவிகள் இந்நாட்டின் மிகவும் பின்தங்கிய சமூகமான மலையகத் தமிழ் மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று மனோ கணேசன் இதன்போது வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர்களான வே. இராதாகிருஷ்ணன், பாரத் அருள்சாமி மற்றும் பிரஜீவன் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
14.03.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ஆங்கில அறிவும் அரசியல்வாதிகளும்

வெளியுறவு விஜித ஹேரத் அண்மைக்கால இராஜதந்திர ஊடாட்டங்களிலும் சர்வதேச ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டிகளிலும் ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசமுடியாமல் இருந்தது குறித்து குறிப்பாக சமூக ஊடகங்களில் பெருமளவு விமர்சனங்கள் வெளியாகின்றன.

கடந்த வாரம் இந்தியாவுக்குச் சென்றிருந்த அவர், பிரபல ஊடகவியலாளர் பால்கி சர்மா உபாத்யாயவுடன் நடத்திய சம்பாஷணைக்கு பிறகு அவரது ஆங்கில அறிவு குறித்து கேலிசெய்யும் வகையிலான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அது குறித்து கொழும்பு ஆங்கிலத் தினசரியொன்று அதன் ஆசிரிய தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்திருந்தது. ஹேரத் நாட்டின் நலன்களை பாதுகாக்கும் வகையில் சர்வதேச அரங்குகளில் செயற்படுகின்றாரா இல்லையா என்பதுதான் முக்கியமானது என்றும் அந்த பத்திரிகை குறிப்பிட்டிருந்தது.

சர்வதேச இராஜதந்திரத்துக்கு ஆங்கில அறிவு முக்கியமானது என்ற போதிலும், ஆங்கில அறிவு இல்லாமல் மொழி பெயர்ப்பாளர்களின் உதவியுடன் இராஜதந்திர ஊடாட்டங்களை திறமையாகச் செய்ய முடியாது என்று கூறமுடியாது.

கடந்த நூற்றாண்டில் சோவியத் தலைவர் ஜோசப் ஸ்ராலினும் சீனத் தலைவர் மாவோ சேதுங்கும் ஆங்கிலத்தை பேசமுடியாதவர்கள். அவர்கள் நெருக்கடிகள் நிறைந்த அந்தக் காலப்பகுதியில் சர்வதேச இராஜதந்திரத்தை திறமையாகக் கையாளவில்லையா?

இரண்டாவது உலகப் போரில் அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் கூட்டுச் சேர்ந்து ஹிட்லரின் ஜேர்மனியைத் தோற்கடித்த ஸ்ராலின், வின்ஸ்ரன் சேர்ச்சிலுடனும் பிராங்களின் ரூஸ்வோல்டுடனும் மொழி பெயர்ப்பாளர்களின் உதவியுடன் தான் பேச்சுக்களை நடத்தினார்.

சீன ஜனாதிபதி சி ஜின்பிங் ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசியதாக பகிரங்கமாக சான்று எதுவுமில்லை. மொழி பெயர்ப்பாளர்களின் உதவியுடனேயே அவர் உலகத் தலைவர்களுடன் பேசுகிறார். அவரால் ஆங்கிலத்தை ஓரளவுக்கு விளங்கிக் கொள்ளமுடியும் என்று கூறப்படுகிறது.

ரஷ்ய ஜனாதிபதி ஆங்கிலத்தை பேசுவார் என்ற போதிலும், முக்கியமான இராஜதந்திர ஊடாட்டங்களில் பெரும்பாலும் மொழி பெயர்ப்பாளர்களையே பயன்படுத்துகிறார். இவ்வாறு எண்ணற்ற தலைவர்களை உதாரணமாக எடுத்துக் காட்ட முடியும்.

அதனால், சர்வதேச இராஜதந்திர ஊடாட்டங்களில் ஆங்கிலத்தைப் பயன்படுத்த முடியாதவர்கள் சாதுரியமாகவும் தந்திரோபாயத் திறமையுடனும் விவகாரங்களைக் கையாளும் திறமையற்றவர்கள் என்று கூறுவது தவறானது.

இலங்கையைப் பொறுத்தவரை, இறுதியாக ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சியின் கீழ் நாம் இருந்த காரணத்தினால் ஆங்கில மூலம் கல்வி கற்பிக்கப்பட்டதன் விளைவாக எமது முன்னைய தலைமுறைகள் ஆங்கிலத்தை திறமையாகக் கையாளக் கூடியவர்களாக இருந்தார்கள். பிறகு தேசியமொழிகளில் கல்வி கற்றதன் காரணத்தினால் எமது தலைமுறையினரில் பிரத்தியேகமாக ஆங்கிலக் கல்வியில் ஆர்வத்தைக் காட்டியவர்களை தவிர, மற்றையவர்கள் ஆங்கிலத்தை வாசிக்கவும் பேசவும் முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

ஆங்கிலம் தெரிந்தவன் தான் அறிவாளி என்பதும் அரசியல் தலைவர்கள் என்றால் ஆங்கிலப் புலமையுடையவர்களாக இருக்க வேண்டும் என்று நினைப்பதும் உண்மையில் காலனித்துவ மனோபாவமேயாகும்.

இன்றைய தமிழ் அரசியல்வாதிகளில் அதிகப் பெரும்பாலானவர்கள் ஆங்கிலத்தில் சரரளமாகப் பேசமுடியாதவர்களே. ஆனால், அவர்கள் அடிக்கடி வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்திப்பதை தங்களது முக்கி யமான அரசியல் செயற்பாடுகளில் ஒன்றாக இடையறாது முன்னெடுக்கி றார்கள். மொழி பெயர்ப்பாளர்களின் உதவியின்றி அவர்களால் அந்த சந்திப்புக்களை நடத்த முடியாது.

ஆனால், நீண்ட காலமாக அரசியலில் ஈடுபடுபவர்கள் குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்துவருபவர்கள் இராஜந்திர ஊடாட்டங்களில் பயனுறுதியுடைய முறையில் செயற்பட வேண்டிய அவசியம் கருதி ஆங்கில மொழி அறிவை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது உகந்ததல்ல.

# ஈரானின் 6,000 இலக்குகள் மீது அமெரிக்க இராணுவம் தாக்குதல்

*வாஷிங்டன், மார்ச். 14*

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா முன்னெடுத்துள்ள "எபிக் பியூரி" இராணுவ நடவடிக்கையின் கீழ், ஈரானில் உள்ள 6,000 இலக்குகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று அமெரிக்க மத்திய கட்டளை அதிகாரி தெரிவித்தார்.

சுமார் 60 ஈரானியக் கப்பல்கள் மற்றும் 30 ஏனைய சிறிய ரகப் படகுகள் இந்தத் தாக்குதல்களில் சேதமடைந்தன அல்லது முழுமையாக அழிக்கப்பட்டன.

அத்துடன் ஈரானிய இராணுவ மையங்கள், ஆயுத உற்பத்தி நிலையங்கள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை மையங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகள் என்பனவற்றையும் இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

(எ)

# ரஷ்யாவின் பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு செய்ய அமெரிக்கா அனுமதி

*வாஷிங்டன், மார்ச். 14*

ஈரான் போரினால் பாதிக்கப்பட்டுள்ள உலகளாவிய எரிசக்தி சந்தையை நிலைப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக, தற்போது கடலில் தேங்கியுள்ள ரஷ்ய எண்ணெய் மற்றும் பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு செய்ய பல நாடுகளுக்கு 30 நாட்கள் உரிமத்தை அமெரிக்கா வழங்கியுள்ளது

நிதியமைச்சர் ஸ்காட் பெசென்ட் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஈரான் போரைத் தொடர்ந்து அதிகரித்து வரும் எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக, அமெரிக்கா தனது மூலோபாய பெற்றோலிய கையிருப்பில் இருந்து 172 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெயை விடுவிக்கும் என்று அமெரிக்க எரிசக்தி துறை அறிவித்த நிலையில், குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மசகு எண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள இந்தத் தற்காலிக உயர்வு ஒரு குறுகிய காலத்திற்கான இடையூறு மட்டுமே. இது நீண்ட கால அடிப்படையில் அமெரிக்க பொருளாதாரத்துக்கு மிகப் பெரிய நன்மையை அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(எ)

ஈரானுக்கு எதிரான போர்:

# 6 நாட்களில் 11.3 பில்லியன் அமெ. டொலர் செலவினம்

*வாஷிங்டன், மார்ச். 14*

ஈரானுக்கு எதிரான போரின் முதல் ஆறு நாட்களில் அமெரிக்காவுக்கு குறைந்தபட்சம் 11. 3 பில்லியன் அமெரிக்க டொலர் செலவினம் ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாக அதிகாரிகள், பாராளுமன்றக் கூட்டத் தொடரின் போது மதிப்பிட்டுள்ளனர்.

அத்தோடு, மோதல் குறித்து மேலதிக தகவல்களை கோரி வரும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

போருக்கான கூடுதல் நிதியுதவியைக் கோரும் கோரிக்கையை வெள்ளை மாளிகை விரைவில் சமர்ப்பிக்கும்.

இந்தக் கோரிக்கை 50 பில்லியன் டொலராக இருக்கலாம் எனச் சில அதிகாரிகள் கூறியுள்ள நிலையில், மற்றவர்கள் இந்த மதிப்பீடு குறைவாக தெரிவதாக குறிப்பிட்டனர்.

# நீரிழிவுக்கு எதிரான உணவு போராட்டம்

*யாழ்ப்பாணம், மார்ச். 14*

மூளாய் கூட்டுறவு மருத்துவமனை சங்கம், ரட்ணம் அறக்கட்டளை என்பன இணைந்து "இலவச மாபெரும் உணவுத் திருவிழா- நீரிழிவுக்கு எதிரான உணவுப் போராட்டம்" எனும் தொனிப்பொருளில் பெருமையுடன் வழங்கும் நீரிழிவு விழிப்புணர்வும் ஆரோக்கிய இலவச உணவுத் திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணியளவில் மூளாய் கூட்டுறவு மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

விசேட மருத்துவ நிபுணர்கள் வழங்கும் ஆரோக்கிய வாழ்வியல் ஆலோசனைகள், சீரான உணவுப் பழக்கவழக்கங்கள், போசாக்கு நிறைந்த உணவுகள் பற்றிய விழிப்புணர்வும் தினசரி உடற்பயிற்சி, மன அழுத்தமற்ற வாழ்வு குறித்த செயல்முறையும் ஆரோக்கிய இலவச உணவுத் திருவிழாவில் கலந்து கொண்டு சுக வாழ்வுக்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(எ-03)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ராசிபலன்

மார்ச் - 13 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 30
நல்ல நேரம் : 7.31 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : ஏகாதசி

**மேடம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உடல் நலம் சீராகும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விமர்சகர்கள் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
கடினமான வேலைகளையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் பயனடைவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். மனைவி வழியில் ஆதரவு பெருகும்.

**கடகம்**
உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். பணவரவு திருப்தி தரும்.

**சிம்மம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கன்னி**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். புது வேலைக் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சொத்து பிரச்சினை ஒன்று தீரும்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். வாகனத்தில் கவனம் தேவை.

**கும்பம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடன் பிரச்சினை கட்டுக்குள் வரும். மதிப்புக் கூடும் நாள்.

**மீனம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். சிலரின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துகொள்வீர்கள்.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையால்

# புதிய தகவல் முகாமைத்துவ முறை யாழ். மாவட்டத்திலும் அறிமுகம்



யாழ்ப்பாணம், மார்ச். 14

இலங்கை சமூக பாதுகாப்பு சபை முற்றிலும் கணினி மயப்படுத்தப்பட்ட புதிய தகவல் முறைமையை அறிமுகப்படுத்தும் நிகழ்வு கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் உபாலி பன்னிலகே மற்றும் சமூக பாதுகாப்பு சபையின் தவிசாளர் எம். கே. பி. திஸநாயக்க ஆகியோரின் பங்குபற்றலுடன் உத்தியோகபூர்வமாக அறிமுகப் படுத்தப்பட்டது.

இதன் மூலம் சமூக பாதுகாப்பு சபையின் செயல்பாடுகள் அனைத்தும் கணினி மயப்படுத்தப்பட்டதுடன்,

பயனாளிகள் நிகழ்நிலை மூலம் சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பும் உறுதிப்பத்திரங்களை உடனடியாக நிகழ் நிலை மூலம் பொற்றுக்கொள் ளக்கூடிய வாய்ப்பும் கிடைத் துள்ளது.

இந்த அறிமுக நிகழ்வை தொடர்ந்து யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் சமூக பாதுகாப்பு சபை அலுவலகத்தில் பயனாளி ஒருவர் நிகழ் நிலை ஊடாக இணைப்பு செய்யப்பட்டு புதிய ஆஐஐ முறை மூலம் உறு திப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டு இலங்கை சமூக பாது காப்பு சபையின் வடமாகாண சிரேஷ்ட இணைப்பதிகாரி பா. பிரதீபனால் உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

# யாழ். பல்கலையில் வீரத்தமிழ் பொங்கல் விழா



யாழ்ப்பாணம், மார்ச். 14

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் வீரத்தமிழ் பொங்கல் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது, முட்டி உடைத்தல் உள்ளிட்ட பாரம்பரிய கிராமிய விளையாட்டுகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து மேடை நிகழ்வுகள் நடைபெற்றன.

பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம், பேராசிரியர் சற்குணராசா, பேராசிரியர் ரகுராம், இசைவாணர் கண்ணன், பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா, எஸ். இராதேயன், தாயக பாடகர் ஜெயா சுகுமார், எழுத்தாளர் தீபச்செல்வன், சின்னப்பா நாகேந்திரராசா, கந்தப்பு ஜெயந்தன், சாந்தலிங்கம் கோகுலன், சிறீ நிர்மலன், சிந்துமயூரன் பிரியங்கா, உதயசீலன் கில்மிஷா, கனகராஜ் அஷானி உள்ளிட்டோர் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். (எ-05)

# காணி ஆக்கிரமிப்பை தடுக்க வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா, மார்ச். 14

வன்னி பிராந்தியத்தில் வவுனியா, மன்னார், மூல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி விவசாயம், சுற்றுச்சூழல், நீர்ப்பாசனம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

நீண்ட காலமாக குறித்த மாவட்டங்களில் காணப்படும் வனஜீவராசிகள் மற்றும் வனவள திணைக்களத்தால் மக்கள் வாழும் இடங்களை ஆக்கிரமித்து கையகப்படுத்தும் செயல்பாடுகள் மற்றும் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்குவதில் ஏற்படுகின்ற தாமதங்கள், விவசாய பிரச்னைகள், நீர்ப்பாசன குளங்களில் ஏற்படுகின்ற பிரச்னைகள், மகாவலி அதிகாரசபையால் குறித்த மாவட்டங்களில் கையகப்படுத்தப்படும் காணிகள் உட்பட பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதில், விவசாய மற்றும் நீரியல் வள அமைச்சர் கே. டி. லால் காந்த, சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்க பட்ட பந்தி, விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன, மாவட்ட கூட்டுறவு பிரதி அமைச்சர் உபபால் சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கே. காதர் மஸ்தான், ம. ஜெகதீஸ்வரன், து. ரவிகரன், ப. சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-10)

# சமுர்த்தி வங்கியால் விற்பனை சந்தை

யாழ்ப்பாணம், மார்ச். 14

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மருதங்கேணி-அம்பன் சமுர்த்தி வங்கியால் வங்கி பிரிவுக்குட்பட்ட சிறு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நேற்று முன்தினம் உள்ளூர் உற்பத்தி பொருட்கள் விற்பனைச் சந்தை ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த சந்தை தொடக்க நிகழ்வு அம்பன் சமுர்த்தி வங்கி முகாமையாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில், விருந்தினர்களாக அம்பன் கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத் தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அம்பன் சமுர்த்தி வங்கி பிரிவுக்குட்பட்ட கிராமங்களை சேர்ந்த மக்கள் பலர் கலந்து கொண்டனர். (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகை காலத்தில் இணைய மோசடிகள்

## மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்

கொழும்பு, மார்ச். 14

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு, இணையத்தில் வெளியாகும் விளம்பரங்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு இலங்கை கணினி அவசர பிரிவு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த ஆண்டின் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் இணையவழி மோசடிகள் தொடர்பான பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அந்தப் பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சருக தமுனுபொல இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் தள்ளுபடிகள், பரிசுப் பொருட்கள் அல்லது விசேட சலுகைகள் என்ற போர்வையில் போலியான விளம்பரங்கள் மற்றும் இணைப்புகள் இணையத்தில் பரவக்கூடிய அபாயம் அதிகம் உள்ளது.

இவ்வாறான இணைப்புகள் மூலம் பயனர்களைப் போலியான இணையத்தளங்களுக்கு அழைத்துச் சென்று, அவர்களின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் முக்கியமான தரவுகளைத் திருடும் அபாயம் காணப்படுகின்றது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# போதைப்பொருள் கடத்தலை தடுக்க கடுமையான சட்டங்கள்

கொழும்பு, மார்ச். 14

சர்வதேச கடற்பரப்பினூடாக முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் கடத்தல்களை தடுப்பதற்காக கடுமையான சட்டங்கள் மற்றும் தண்டனைகளை உள்ளடக்கிய சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன. அரசாங்கமும் போதைப்பொருள் கடத்தலை முடிவுக்குக் கொண்டுவருவதுடன், அதன் வலையமைப்பையும் ஒழிப்பதாக உறுதிபூண்டுள்ளது. எனவே, இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்கள் தப்பிச் செல்வதற்கு ஒருபோதும் வாய்ப்பு வழங்கப்படபோவதில்லை.

இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் நபர்கள் இதிலிருந்து விலகிக்கொள்ளுமாறு பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர எச்சரித்துள்ளார்.

கடற்படையினரால் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட மீன்பிடி படகுகள் நேற்று முன்தினம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டன. அங்கு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# "பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும் போது அவதானம்"

கொழும்பு, மார்ச். 14

கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளான மிரிஹான, மஹரகம, தெஹிவளை மற்றும் கல்கிஸ்ஸை போன்ற பகுதிகளில் உள்ள வீடுகளில், வீட்டு வேலைக்காக அமர்த்தப்படும் நபர்களால் தங்கம் மற்றும் பணம் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதன்படி, சில நபர்கள் திட்டமிட்ட முறையில் வசதி படைத்த வீடுகளை இலக்கு வைத்து, தமது குடும்ப உறுப்பினர்களையும் சம்பந்தப்படுத்தி திருட்டுக்களில் ஈடுபடுகின்றனர்.

குறுகிய காலத்திலேயே வீட்டு உரிமையாளர்களின் நம்பிக்கையை வென்றெடுத்து, பின்னர் திருட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். எனவே இது குறித்து பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று பொலிஸார் ஆலோசனை வழங்கியுள்ளனர். (எ)

# "நிர்வாக திறமையற்ற ஆட்சி எதிராக மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி"

கொழும்பு, மார்ச். 14

மத்திய கிழக்கின் போர்ச் சூழலை காரணம் காட்டி, அரசாங்கம் மேற்கொண்டுள்ள எரிபொருள் மற்றும் எரிவாயு விலை உயர்வு மக்களை ஏமாற்றும் செயலாகும். தேர்தலுக்கு முன்பு வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாக, வரிகளைக் குறைக்காமல் மக்களை அரசாங்கம் நசுக்கி வருகிறது.

நிர்வாகத் திறமையற்ற இந்த ஆட்சிக்கு எதிராக மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

உயிர்த்த ஞாயிறு தின விசாரணை:

# தவறு செய்யாதவர்கள் அஞ்சத் தேவையில்லை

மொனராகலை, மார்ச். 14

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான விசாரணைகள் எந்தவித அரசியல் பாகுபாடுமின்றி முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தவறு செய்யாத எவரும் இது குறித்து அச்சமடையத் தேவையில்லை என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி கைது செய்யப்பட்டமை அரசியல் வட்டாரங்களில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், விசாரணைகளை குழப்ப நினைப்பவர்களுக்கு மத்தியில் அரசாங்கம் சட்டத்தை முறையாக அமுல்படுத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மொனராகலை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போது அவர் இதனைத் தெரிவித்தார். (எ)

# வெளிநாட்டு சிகரெட்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச். 14

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்களுடன் சந்தேகநபர் ஒருவர் விமான நிலைய போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

விமான நிலைய போதைப் பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 38, 000 சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன. (எ)

# வெளிநாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச். 14

அம்பாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரவீதி பகுதியில் தங்காலை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது, வெளிநாட்டுத் தயாரிப்பு பிஸ்டல் ரக துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை மாலை இந்தச் சம்பவம் பதிவானது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டுத் தயாரிப்பு பிஸ்டல் ரக துப்பாக்கி, 05 தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2026இல் இதுவரையான காலப்பகுதியில்

# 6 இலட்சம் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர்

கொழும்பு, மார்ச். 14

2026 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 6 இலட்சத்தை தாண்டியுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மொத்தம் 6 இலட்சத்து 23, 651 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து ஒரு இலட்சத்து 15,772 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

பிரித்தானியாவில் இருந்து 66,164 பயணிகளும், ரஷ்யாவில் இருந்து 56,114 பயணிகளும், ஜேர்மனியில் இருந்து 45,939 பயணிகளும், சீனாவில் இருந்து 39,725 பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

இவர்களைத் தவிர பிரான்ஸ், அவுஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

மேலும், மார்ச் மாதத்தின் முதல் 11 நாட்களில் மாத்திரம் 66,996 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

(எ)

# கண்டி, நுவரெலியாயில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு, மார்ச். 14

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகளவான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறிதளவு மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் சீரான வானிலை நிலவும் என அந்த திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படலாம்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடும் என்பதால், அவற்றினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள் ளப்படுகிறார்கள்.(எ)

# தனியார் மருத்துவமனையில் காலாவதியான மருந்துகள்

## 100,000 ரூபாய் அபராதம் விதிப்பு

கல்முனை, மார்ச். 14

காலாவதியான மருந்துப் பொருட்களை பாவனைக்கு வைத்திருந்த தனியார் மருத்துவமனைக்கு எதிராக கல்முனை நீதிவான் நீதிமன்று100, 000 ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேசத்தில் இயங்கி வரும் பிரபல தனியார் மருத்துவமனைக்கு அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி தலைமையிலான புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது குறித்த மருத்துவமனையில் பாவனைக்கு வைத்திருந்த காலாவதியான மருந்துப் பொருட்களை கைப்பற்றியதுடன் குறித்த மருத்துவமனைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றத்தை ஒத்துக் கொண்ட தனியார் மருத்துவமனையின் முகாமையாளருக்கு நீதிமன்றத்தால் 100,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

(எ-01)

## ஹற்றனில் பள்ளத்தில் வீழ்ந்து ஓட்டோ விபத்து: மூவர் காயம்

நுவரெலியா, மார்ச். 14

ஹற்றன் - போடைஸ் பிரதான வீதியின் போடைஸ் என்சி பகுதியில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்தது.

சுமார் 70 அடி ஆழமான பள்ளத்தில் வீழ்ந்த ஓட்டோவில் பயணித்த மூவர் படுகாயமடைந்தனர்.

டிக்கோயா பகுதியிலிருந்து டயகம நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோ, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்தது.

விபத்து நேரத்தில் சாரதி உட்பட மூவர் அதில் பயணித்தனர்.

இவர்கள் டிக்கோயா பகுதியிலிருந்து டயகம நோக்கி தோட்டப் பகுதிகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விபத்தில் காயமடைந்த மூவரும் பொது மக்களின் உதவியுடன் உடனடியாக டிக்கோயா ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டனர். விபத்தினால் ஓட்டோவுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.(எ)

# வீட்டுத் திட்டத்துக்குரிய காசோலைகள் வழங்கல்



மட்டக்களப்பு, மார்ச். 14


வீடற்றவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்கும் அரசாங்கத்தின் செயல்திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒரு வீட்டுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கு வீடுகளை அமைப்பதற்கான முதற்கட்ட கொடுப்பனவு 150, 000 ரூபாய் வீதம் வழங்கப்பட்டன.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் உ. உதயசிறீதர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கினார்.

2025 ஆம் ஆண்டு வரவு- செலவுத்திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வீட்டுத் திட்டத்துக்காக மாத்திரம் 230 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 300 வீடுகள் அமைக்கப்பட்டன. அதேபோன்று 2026 ஆம் ஆண்டு வரவு- செலவுத்திட்டத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 355 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 6 வீட்டுத் தொகுதிகளை உருவாக்குவதற்காக 115 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கந்தசாமி பிரபு எம்.பி. இதன் போது தெரிவித்தார். (எ)

# மட்டு. மண்முனை பாலத்துக்கு அருகில் மதுபான உற்பத்தி நிலையம் முற்றுகை



மட்டக்களப்பு, மார்ச். 14

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்முனைப் பாலத்துக்கு அருகாமையிலுள்ள தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசி யத் தகவலுக்கு அமைவாக, நேற்று முன்தினம் இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது, குறித்த தீவுப் பகுதியில் சூட்சுமமான முறையில் மதுபான உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சந்தேகநபர்கள் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

90 ஆயிரம் லீற்றர் கோடா, 33, 500 லீற்றர் சட்டவிரோத மதுபானம், இரண்டு பெரிய கலன்கள் என்பன கைப்பற்றப் பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் 26 மற்றும் 36 வயதுடைய நபர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (எ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தடையற்ற எரிபொருள்....

முன்வைத்தார்.

போர் நீடிக்கும் பட்சத்தில் எரிபொருள் கையிருப்புகளைப் பெறுவதில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் குறித்து அமைச்சர் ஹேரத் இதன்போது விரிவாக விளக்கமளித்தார்.

இந்தநிலையில், இலங்கையின் இந்த வேண்டுகோளுக்கு இந்தியா சாதகமாகப் பதிலளித்துள்ளதாக அரசாங்கம் தற்போது அறிவித்துள்ளது.

இதனையடுத்து, தேவையான எரிபொருள் இருப்புகளை உறுதி செய்வதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இரண்டு நாடுகளும் ஏற்கனவே ஆலோசிக்கத் தொடங்கியுள்ளன.

எதிர்காலத்தில் நிலவக்கூடிய நிச்சயமற்ற சூழலில், இலங்கையில் தடையில்லாத மற்றும் பாதுகாப்பான எரிபொருள் விநியோகத்தைப் பேணுவதே இந்த நடவடிக்கையின் பிரதான நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ்.கோட்டை, குருநகர்...

உலக வங்கியின் தென்னாசியாவுக்கான உப தலைவர் ஜோஹன்னஸ் சுட் தலைமையிலான உயர்மட்டக் குழுவினருக்கும், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான அதிகாரிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இச்சந்திப்பின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துமாறு உலக வங்கிக்குப் பணிப்புரை விடுத்திருந்தார். அதற்கமைவாக, இவ்விரு மாகாணங்களிலும் முன்னெடுக்கப்பட வேண்டிய முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன. அந்த வகையில், முதற்கட்ட அபிவிருத்திக்காக வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள இரண்டு பிரதான இடங்களையும் உலக வங்கிக் குழுவினர் தற்போது நேரில் பார்வையிட்டுள்ளனர்.

சுற்றுலாவிகள் அதிகளவில் வருகை தரும் இடமாக யாழ்ப்பாணக் கோட்டை விளங்குகின்றது. எனினும், அங்கு வரும் சுற்றுலாவிகளை மேலும் ஈர்க்கக்கூடிய வகையிலான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அங்கு போதியளவில் இல்லை. அவை உடனடியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அதேபோன்று, எமது மாகாணத்தின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மீனவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காகக் குருநகர் மீன்பிடித் துறைமுகமும் நவீன முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அத்துடன், எமது மாகாணத்தின் சார்பில் நாம் முன்னுரிமைப்படுத்தியுள்ள ஏனைய முக்கிய திட்டங்களை உலக வங்கியின் இரண்டாம் கட்டச் செயற்திட்டங்களில் உள்ளடக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட உலக வங்கியின் தென்னாசியாவுக்கான உப தலைவர் ஜோஹன்னஸ் சுட், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் தொடர்பில் உலக வங்கி தற்போது கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார். தனது இந்தக் களப் பயணத்தின் போது, வடக்கு மாகாணத்தில் எவ்வாறான வளங்களும் வாய்ப்புகளும் காணப்படுகின்றன என்பதை நேரடியாக அறிந்துகொள்ள முடிந்ததாக அவர் தெரிவித்தார்.

மேலும், இலங்கைக்கான உலக வங்கியின் உதவிகள் பிரதான 5 துறைகளின் கீழ் அமையவுள்ளன எனக் குறிப்பிட்ட அவர், முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இத்திட்டங்கள் தொடர்பில் இம்மாதம் 31ஆம் திகதி நடைபெறவுள்ள உலக வங்கியின் முகாமைத்துவக் குழுக் கூட்டத்திலேயே இறுதித் தீர்மானம் எட்டப்படும் எனவும் சுட்டிக்காட்டினார். (அ)

## நாட்டில் 1/4 பங்கு மக்கள்...

தெரிவித்துள்ளார்.

எனவே, வறுமையை ஒழிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் கிராம மட்டத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் நிலவும் வறுமைக்கான உண்மையான காரணங்களை கண்டறிந்து, சமூக அபிவிருத்தி சபையின் பிரதிநிதிகளுடன் இணைந்து முறையான அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கவேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

தற்போது மத்திய கிழக்கில் நிலவும் போர் சூழல் காரணமாக உலகப் பொருளாதாரத்தில் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ள போதிலும், இலங்கைக்கு அதன் பாதிப்பு குறைவாகவே காணப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த 15 மாத காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட காத்திரமான நடவடிக்கைகளே இதற்கு காரணமாகும். அவ்வாறு பொருளாதாரத்தை சீர்செய்யாமல் இருந்திருந்தால், நாடு மீண்டும் ஒரு வரிசை யுகத்திற்கு தள்ளப்பட்டிருக்கும் என அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார். (அ)

# அடிப்படை உரிமை மீறிய மதுவரி அதிகாரிகள் சொந்தப் பணத்தில் நட்டஈடு செலுத்த உத்தரவு!

கொழும்பு, மார்ச் 14

மிதிகம பகுதியில் உணவக உரிமையாளர் ஒருவரைத் தாக்கித் துன்புறுத்தியதன் மூலம், மதுவரி திணைக்களத்தின் 7 அதிகாரிகள் அவரது அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி, குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகள் தலா 75,000 ரூபாய் வீதம், ஏழு அதிகாரிகளும் இணைந்து தமது தனிப்பட்ட பணத்திலிருந்து மொத்தம் 525,000 ரூபாய் நட்டஈட்டை மனுதாரருக்கு வழங்க வேண்டும் என, உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நட்டஈட்டுத் தொகையை, தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் செலுத்தி முடிக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த மனுவை விசாரணை செய்த ஜனக் டி சில்வா, சம்பத் அபேகோன் ஆகியோரின் இணக்கப்பாட்டுடன், உயர்நீதிமன்ற நீதியரசர் மேனகா விஜேசுந்தர இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி, தனது உணவகத்திற்கு வெளியே ஏதோ சலசலப்பு ஏற்படுவது கேட்டதாகவும், அதற்கமைய நிறுவனத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமெராக்களைப் பரிசோதித்ததாகவும் மனுதாரர் தெரிவித்தார்.

இதன்போது, பிரதிவாதிகளில் சிலர் தனது ஊழியர்களைத் தாக்கும் காட்சியைக் கண்டதாக அவர் குறிப்பிட்டார்.

பின்னர் தனது நிறுவனத்திற்குள் புகுந்த அந்த அதிகாரிகள், தாம் பொலிஸார் எனக் கூறிக்கொண்டு, தடிகளால் தம்மைத் தாக்கியதாகவும், பின்னர் பெட்சீட் ஒன்றால் கண்களைக் கட்டித் தாக்கியதுடன், மது பானப் போத்தல்கள் குறித்து அவ்வப்போது கேள்வி எழுப்பியதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளைப் பரிசீலித்த மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழு, இந்தச் செயலின் மூலம் பிரதிவாதிகளான மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மனுதாரரின் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளனர் என ஏகமனதாகத் தீர்ப்பளித்தது.

இந்தச் சட்டவிரோதச் செயல் மூலம், பிரதிவாதிகள், மனுதாரருக்கு சட்டத்தின் முன் சமமான பாதுகாப்புப் பெறுவதற்கான அடிப்படை உரிமையை மீறியுள்ளனர் என்றும் நீதியரசர்கள் குழு தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. (அ)

# மேல் நீதிமன்ற நீதிபதியாக சதீஸ்தரன்

கொழும்பு, மார்ச் 14

புதிய மேல் நீதிமன்ற நீதிபதியாக எஸ்.சதீஸ்தரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து எஸ்.சதீஸ்தரனிடம் வழங்கினார்.

நீதித்துறை சேவையில் விசேடதர அதிகாரியான எஸ். சதீஸ்தரன், சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகவும் பணியாற்றியுள்ளார். (அ)

## மானிப்பாய் பிரதேச சபை

உரிமை இருக்கின்றது எனத் தெரிவித்த உறுப்பினர்கள், அந்த சுற்றறிக்கையை வாசித்து காட்டினர். அதன் பின்னர் அவர்கள் குறித்த கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

கூட்டத்தின் பின்னர் பிரதேச சபையின் உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கையில்-

இந்த கூட்டத்திலும், பிரதேச சபை உறுப்பினர்களாகிய எம்மை புறக்கணிக்கின்ற நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அனுமதியின்றி குறித்த கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கின்ற அனைவரையும் வெளியேற்றுமாறு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கூறினார்.

பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு எமக்கு அனுமதி வழங்குமாறு கோரி நாங்கள் இதற்கு முன்னர் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவரான சிறீ பவானந்தராஜாவிடம் பிரதேச சபையின் ஊடாக கடிதம் ஒன்றினை வழங்கினோம்.

இந்நிலையில் அவர் சுற்றறிக்கையில் உள்ள ஒரு சரத்தினை சுட்டிக்காட்டி, அதன் அடிப்படையில் நாங்கள் குறித்த கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதென பிரதேச சபைக்கு பதில் வழங்கினார்.

ஆனால் அதே சுற்றறிக்கையில் 5.4இல் அபிவிருத்தி செயற்பாட்டுடன் தொடர்புடைய எந்த ஒரு தரப்பினரையும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு அழைப்பதற்கு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவிற்கு அதிகாரமுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்கையில் திட்டமிட்ட முறையிலே எங்களை வெளியேற்றுமாறு கூறியுள்ளார். எனவே நாங்கள் அதற்கு இடமளிக்க மாட்டோம். தொடர்ச்சியாக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் கலந்துகொள்வோம்-என்றனர். (அ-05)

## ரஷ்யாவிடம் இருந்து...

எளிதாக்குவதற்கு தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன், தேவைப்படும் போதெல்லாம் இலங்கைக்கு உதவுவதற்கு ரஷ்யா தயாராக இருப்பதாகவும் அவர் குறிப் பிட்டார்.

தொழிலாளர், நிதி மற்றும் பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சர் அனில் ஜெயந்த, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா, வெளிவிவகார அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்தனர்.

ஈரான் போரினால் பாதிக்கப்பட்டுள்ள உலகளாவிய எரிசக்தி சந்தைகளை உறுதிப்படுத்துவதற்கான ஒரு படியாக, கடலில் சிக்கித் தவிக்கும் ரஷ்ய எண்ணெய் மற்றும் பெற்றோலியப் பொருட்களை வாங்குவதற்கு அமெரிக்கா நாடுகளுக்கு 30 நாள் உரிமத்தை வழங்கியதன் பின்னணியில் இந்த சந்திப்பு நடந்துள்ளது. (அ)

## உலக நாடுகளை போன்று...

இனத்தவர்களும் பௌத்த, இந்து, கத்தோலிக்க மற்றும் இஸ்லாமிய மதங்களைப் பின்பற்றுபவர்களும் இந்த நாட்டின் சமமான பிரஜைகள் என அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் பதவிகளைப் பகிர்ந்துகொள்வதைத் தாண்டி, மக்களிடையே வலுவான பிணைப்பை ஏற்படுத்துவதே தற்போதைய முக்கியத் தேவை என அவர் தெரிவித்தார்.

வளர்ந்த நாடுகளான அமெரிக்காவில் ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சிகள் இருப்பதையும், பிரிட்டனில் கன்சர்வேட்டிவ் மற்றும் தொழிற் கட்சிகள் இருப்பதையும் நாம் காண்கிறோம். அதேபோல ஜேர்மனியிலும் கொள்கை ரீதியான அரசியல் நிலவுகிறது.

இலங்கையிலும் இத்தகைய முதிர்ச்சியடைந்த அரசியல் முறைமை உருவாக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## மின்சார தொழிற்சங்கங்களின்...

தீர்வை வழங்குவார் என எதிர்பார்ப்பதாக மின்சார தொழிற்சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.

அரசாங்கத்தைத் தோற்கடிக்க வேண்டிய தேவை தமது சங்கங்களுக்கு இல்லை என மின்சார தொழிற்சங்க உறுப்பினர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

புதிய நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபையினருடன் ஜனாதிபதி நேற்று மாலை விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளதாகவும், அதன்போது மின்சார தொழிற்சங்கங்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்க ஜனாதிபதி உடன்பாடு தெரிவித்துள்ளதாகவும் தொழிற்சங்க உறுப்பினர்கள் கூறினர். (அ)

## "வீட்டில் இருந்து வேலை"...

கண்காணித்து வருவதாகவும், நிலைமை மோசமடைந்தால், பொது மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்யும் ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவது குறித்து பரிசீலிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த மோதல் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளை சீர்குலைத்து, கப்பல் செலவுகளை அதிகரித்து, சர்வதேச சந்தைகளில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உயர்த்தியுள்ளது. குறிப்பாக உலகளாவிய எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் இதனால் உயர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலைகள் ஏற்கனவே உள்ளூரில் சரி செய்யப்பட்டிருந்தாலும், ஏப்ரல் மாதத்திற்குள் புதிய ஏற்றுமதிகள் அதிக விலையில் வரும்போது மேலும் அதிகரிப்பு ஏற்படக்கூடும் என்றும் அமைச்சர் எச்சரித்தார்.

சில தனியார் எரிவாயு விநியோகஸ்தர்கள் விலைகளை அதிகரிக்க முயற்சித்ததாகவும், ஆனால் அரசாங்கம் நிலைமையைக் கண்காணித்து விலை நிலைத்தன்மையைப் பராமரிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு ஊடக சுதந்திரத்தை உறுதி செய்க!

## உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ஜனாதிபதி அநுர குமாரவுக்கு கடிதம்

கொழும்பு, மார்ச் 14

இலங்கையில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறு கோரி, இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் ஜனாதிபதி மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அண்மைக் காலங்களில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் கைதுகள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் அச்சங்கம் தனது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக, பல வருடங்களாகத் தற்காலிகமாகப் புலம் பெயர்ந்து வாழ்ந்த "லங்கா ஈ நியூஸ்" இணையதளத்தின் ஆசிரியர் சந்தருவன் சேனாதீர, கடந்த புதன்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டமை மற்றும் "சிலோன் ருடே" பத்திரிகையின் பிரதி ஆசிரியர் சுலோச்சனா ராமையா மோகன் தனது செய்தி சேகரிப்புப் பணியின்போது பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டமை ஆகிய சம்பவங்களை அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஈரானிய மாலுமி ஒருவரை நேர்காணல் செய்ய முயன்றபோது, சுலோச்சனா ராமையாவிடமிருந்த குறிப்புக்களைப் பொலிஸார் பறிமுதல் செய்ததோடு, அவரைப் பணி செய்யவிடாது தடுத்து வாய்மொழி மூலமாக அவதூறு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் மீண்டும் ஒரு அச்சமான சூழலைத் தோற்றுவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள ஊடகவியலாளர் சங்கம், ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாக்கவும், ஊடக சுதந்திரத்தை நசுக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவும் ஜனாதிபதி தலையிட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

# மின்சாரத்திற்கான தேவை இரவில் பாரியளவு உயர்வு!

கொழும்பு,

நாட்டில் ஏற்பட்டுள்ள திரவ பெற்றோலிய எரிவாயு தட்டுப்பாடு காரணமாக, மின்சாரத்திற்கான தேவை குறிப்பாக இரவு நேரங்களில் பாரியளவில் அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாக சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதால், பொதுமக்கள் சமையல் நடவடிக்கைகளுக்காக மின்சார அடுப்புகள் மற்றும் இண்டக்ஷன் அடுப்புகளை அதிகளவில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளமையே இந்த அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

மின்சார சபையின் தரவுகளின்படி, மாலை 6.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையான உச்ச பயன்பாட்டு நேரங்களில் மின்சாரத்திற்கான தேவை முன்னெப்போதும் இல்லாத வகையில் உயர்ந்துள்ளது.

சமையல் உபகரணங்கள் அதிக மின்சாரத்தை நுகரக் கூடியவை என்பதால், ஒரே நேரத்தில் பல குடும்பங்கள் மின்சாரத்தைப் பயன்படுத்தும்போது மின் கட்டமைப்புக்கு அதிக அழுத்தம் ஏற்படுவதாக பொறியியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# மரக்கறி எண்ணெய் கடும் பற்றாக்குறை!

கொழும்பு, மார்ச் 14

உள்ளூர் சந்தையில் மரக்கறி எண்ணெய் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்களுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக பேக்கரிகள் மற்றும் சிற்றுண்டி உணவு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதுள்ள பற்றாக்குறையின் அடிப்படையில், சந்தையில் மரக்கறி எண்ணெயின் விலையை ஒரு லீற்றருக்கு சுமார் 100 ரூபாய் அதிகரிக்க வணிகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் பற்றாக்குறையுடன், உள்ளூர் சந்தையில் தேங்காய் எண்ணெயின் விலையும் ஒரு லீற்றர் சுமார் 100 ரூபாய் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு காலத்தில் தேங்காய் எண்ணெயின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

அடுத்த சில நாட்களில் தேங்காய் விலையும் அதிகரிக்கக்கூடும் என வணிகர்கள் தெரிவித்தனர். (அ)

# சுரேஷ் சாலே தனது மகனை சந்திப்பதற்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, மார்ச் 14

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலே, தனது மகனைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை எனவும், அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ள அறையில் எலிகள் தொல்லை இருப்பதாகவும் பல்வேறு தரப்பினரால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்காகக் கைது செய்யப்பட்டுள்ள, அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே தடுத்து வைக்கப்பட்டுள்ள விதம் குறித்து எழுந்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அறிக்கையை பொலிஸார் எதிர்பார்த்துள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வூட்லர், தடுத்து வைக்கப்பட்டுள்ள சூழல் குறித்து இதுவரை உத்தியோகபூர்வமாக எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, சிறையறையில் எலிகள் இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தமக்கு முதன்முறையாகத் தெரியவந்துள்ளதாகவும், இது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வழங்கவுள்ள விரிவான அறிக்கையின் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஈரான்-அமெ. போர் குறித்து தீர்மானம் தமிழரசுவுக்கு எந்த தொடர்பும் இல்லை

## சுமந்திரன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஈரான் - அமெரிக்கா போர் விவகாரம் குறித்து பச்சிலைப் பள்ளி பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென அக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர்-

இத் தீர்மானம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் நிறைவேற்றப்பட்டதாக சொல்லப்படுகிறது.

இதற்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்பது மட்டுமல்ல, இது எமது கட்சிக் கோட்பாடுகளுக்கு முரனானதும் கூட எமது ஆளுகைக்குள் இருக்கும் மற்றைய சபைத் தவிசாளர்களும் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்று ஏற்கனவே கட்சித் தலைவரும் நானும் அவர்களுக்கு கடுமையான உத்தரவை வழங்கியுள்ளோம்.

சர்வதேச விவகாரங்களைக் கையாள்வதற்கு வேறு மட்டங்களில் பொறுப்புள்ளவர்கள் இருக்கிறார்கள். இந்த தீர்மானமும் அதன் தமிழ் மொழி பெயர்ப்பும் எந்தப் பின்னணியில் உருவானவை என்பதை நாம் விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்போம்.

குறித்த தவிசாளர் ஏற்கனவே கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு கட்சி உறுப்புரிமையில் இருந்து இடை நிறுத்தப்பட்ட ஒருவர் என்பதும் கவனிக்கத் தக்க விடயம்-என்று தெரிவித்துள்ளார். (அ)

# 200 கிலோ போதைப்பொருள் அழிப்பு

கொழும்பு, மார்ச் 14

கொழும்பு மேல் நீதிமன்றம் மற்றும் பலப்பிட்டிய நீதவான் நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த சுமார் 200 கிலோகிராம் போதைப்பொருள்கள் நேற்று வனாத்தவில்லு லக்டோவத்தயில் வைத்து அழிக்கப்பட்டன.

அத்துடன், அரச இரசாயன பகுப்பாய்வாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1,500 வழக்குகளுக்குரிய சான்றுப் பொருட்களும் இதன்போது அழிக்கப்பட்டன.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குகள் நிறைவடைந்த போதைப்பொருட்கள் மற்றும் போதை மாத்திரைகள், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று அதிகாலை நீதிமன்றத்திலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டன.

# எரிவாயு விநியோகத்தில் முறைகேடு; கியூ.ஆர். முறையை அறிமுகம் செய்க!

## சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம்

கொழும்பு, மார்ச் 14

தற்போது எரிவாயு விலையை அரசாங்கம் அதிகரித்திருந்தாலும், நுகர்வோர் பணம் செலுத்துவது எரிவாயுவுக்காக அல்ல, தம்வசம் உள்ள வெற்றுச் சிலிண்டர்களுக்காகவே ஆகும். சந்தையில் எரிவாயு எங்கே இருக்கின்றது என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அசேல சம்பத் கேள்வி எழுப்பினார்.

எரிவாயு விநியோகத்தில் நிலவும் இந்த முறைகேடுகளைத் தவிர்க்க உடனடியாக கியூ.ஆர். குறியீட்டு முறையை அறிமுகப்படுத்தவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

தேசிய நுகர்வோர் முன்னணி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச ரீதியிலான போர்ச் சூழல் எமக்கு இன்னும் நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. நம்மிடம் உள்ள கையிருப்புகளைக் காட்டி அநியாயமான முறையில் விலையை உயர்த்தும்போது, அது நுகர்வோரை நேரடியாகப் பாதிக்கின்றது.

ஏன் இந்த அறிவிப்புகளை நள்ளிரவில் விடுக்கவேண்டும்? பகல் 10 மணிக்கு அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்க முடியாதா? நள்ளிரவில் விலையை உயர்த்துவதால், மறுநாள் காலை சந்தையில் உள்ள மருந்துகள் முதல் அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் எகிறுகின்றன. அரசாங்கம் ஒன்றைச் செய்யும்போது, தனியார் துறையினரும் தன்னிச்சையாக விலைகளை உயர்த்தி இலாபம் ஈட்டுகின்றனர்.

இன்று எரிவாயு விலையை 300 ரூபா மற்றும் 120 ரூபா என இரு வேறு விலைகளில் உயர்த்தியுள்ளனர். ஆனால், சந்தையில் எரிவாயு கிடைப்பதில்லை. ஒரு ஹோட்டலில் குறைந்தபட்சம் 10 சிலிண்டர்கள் இருக்கும். லாப்ஸ் மற்றும் லிட்ரோ என தலா ஐந்து சிலிண்டர்களை வைத்திருப்பார்கள்.

அவர்களின் அன்றாடத் தேவைக்கு 3 அல்லது 4 சிலிண்டர்களே போதுமானது. மீதமுள்ள 7 சிலிண்டர்களும் வெற்றாகவே இருக்கும். சந்தைக்கு விநியோகம் வந்தவுடன், குளத்தில் மீன்களுக்கு உணவு போடுவது போல, இந்த வெற்றுச் சிலிண்டர்களை வைத்திருப்பவர்கள் அனைத்தையும் பதுக்கிக் கொள்கின்றனர். இதனால் சாதாரண குடும்பங்களுக்கு எரிவாயு கிடைப்பதில்லை.

எரிவாயு விநியோகத்தில் நிலவும் இந்த முறைகேடுகளைத் தவிர்க்க உடனடியாக கியூ.ஆர். குறியீட்டு முறையை அறிமுகப்படுத்த வேண்டும்-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.